# சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)
# திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்
# MCOP . No.170/2018

**நாள் : 19.11.2025**

**எ.ம.சா.** 2 (1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு.K. வெங்கடேசன் | மாவட்டம் | : | திருப்பத்துர் |
| தந்தை/கணவர் பெயர் | : | திரு.கிருஷ்ணசாமி | வயது | | 58 |
| ஊர் | : | ஆம்பூர் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| வட்டம் | : | ஆம்பூர் | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை:**

நான் ஆம்பூர் கிராமிய காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையில் ஆம்பூர் கிராமிய காவல் நிலைய குற்ற எண்.263/2017 வழக்கில் கொடுக்கப்பட்ட புகார் மனு உள்ளிட்ட புலன் விசாரணையின்போது சேகரிக்கப்பட்ட ஆவணங்களை கொண்டு வந்து சமர்ப்பிக்குமாறு பணிக்கப்பட்டிருந்தது. மேற்படி வழக்கு சம்பந்தப்பட்ட சி.டி. பைலை கொண்டு வந்துள்ளேன். அதனடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

ஆம்பூர் கிராமிய காவல் நிலைய குற்ற எண்.263/2017 சம்பந்தப்பட்ட வழக்கானது சென்னை, மியாட் மருத்துவமனையில் சாலை விபத்தில் காயம்பட்டு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நரேந்திரன், வயது (23), த/பெ.ஆனந்தன், பாச்சல், திருப்பத்தூர் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் வாக்குமூலம் உண்மை நகல் எ.ம.சா.ஆ.2, முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் எ.ம.சா.ஆ.3., பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் உண்மை நகல் எ.ம.சா.ஆ.4, 5., விபத்து பதிவேடு உண்மை நகல் எ.ம.சா.ஆ.6, குற்ற இறுதி அறிக்கை எ.ம.சா.ஆ.7. மேற்படி வழக்கு சம்பந்தப்பட்ட தகவலானது காவல்

நிலையத்திற்கு மியாட் மருத்துவமனையிலிருந்து சம்பந்தப்பட்ட அதிகார வரம்புக்குட்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் ஆம்பூர் கிராமிய காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல் கிடைக்கப்பெற்றது.

அழைப்பாணையில் கண்டபடி 108 மூலம் அனுப்பியதற்கான ஆவணங்கள் புலன் விசாரணையின்போது கிடைக்கப்பெறவில்லை. மேற்படி விபத்தில் காரில் பயணித்த ஒரு முதியவர் இறந்துபோன நிலையில் ஓட்டுநர் உள்ளிட்ட 3 பேர் காயமடைந்துள்ளனர். மேற்படி குற்ற வழக்கானது முழுமையான புலன் விசாரணைக்கு பின்னிட்டு TN 83 Y 3874 என்ற இருசக்கர வாகன ஓட்டுநருக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. விபத்து சம்பந்தமாக நரேந்திரன் மட்டுமே புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். இதர காயமடைந்தவர்களின் வாக்குமூலமானது குவிமுச பிரிவு 161ன் கீழ் பெறப்பட்டுள்ளது. அந்த புகார் வாக்குமூலத்தில் விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகன ஓட்டுநர்மீதுதான் புகார் கொடுத்துள்ளார். விபத்து நடந்த சமயத்தில் மசூதி அருகே உள்ள தெருவில் இருந்து இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் சாலையின் குறுக்காக வந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளதாகத்தான் விசாரணையில் தெரியவந்தது. அதாவது விபத்தின்போது ஆம்பூர்–வாணியம்பாடி தேசிய நெடுஞ்சாலையில் மேற்கிலிருந்து கிழக்காக குறுக்கே இருசக்கர வாகனம் வந்ததாக புலன் விசாரணையில் தெரியவந்துள்ளது. இருசக்கர வாகனத்தின்மீது கார் மோதுவதை தவிர்க்கவேண்டி காரை பள்ளத்தில் விட்டதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் அவ்வாறு புலன் விசாரணையில் தெரியவரவில்லை. விபத்திற்கு காரணமான இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த மணிகண்டன், த/பெ.குமரேசன் என்பவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

மேற்படி விபத்து சம்பந்தமாக TN 83 Y 3874 என்ற இருசக்கர வாகன ஓட்டுநருக்கு எதிராக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தின் பதிவுச்சான்றிதழானது பிரபுராஜன்/1ஆம் எதிர்மனுதாரர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கினை பொருத்தவரை புகார் வாக்குமூலத்தை பெற்று சம்பவ இடம் சென்று அங்கிருந்த சாட்சிகளை முறைப்படி விசாரித்து சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து முழுமையான விசாரணைக்கு பின்னிட்டு இருசக்கர வாகன ஓட்டுநர்மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** – இல்லை

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.